# திருப்பாற்கடல் (க்ஷீராப்தி) - ஆழ்வார்கள் அநுபவம்

## (அப்ராக்ருத திவ்ய தேசம்)




ஆசிரியர்:

'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஸேவா ரசிகன்'

'ஸ்ரீ வேதாந்த தேசிக பதாம்புஜ ஸேவா ரசிகன்'

ஒப்பிலியப்பன் கோவில் ஸ்ரீ வரதாசாரி சடகோபன்

தமிழ், ஸம்ஸ்க்ருதம் மற்றும் ஆங்கிலம் தட்டச்சு உதவி - ஸ்ரீ ஸ்ரீநிவாசன் நாராயணன்

மின்-புத்தக தொகுப்பு உதவி - சௌ. ஸ்வேதா சுந்தரம்

(அட்டைப்படத்தில் ஸ்ரீ ரங்கநாதர் - ஸ்ரீரங்கம்)

# உள்ளடக்கம்

திருப்பாற்கடல்  ( ஆழ்வார் பாசுரங்களின் வைபவம்)  -----  பக்கம் 1 முதல் 32 வரை



ஸ்ரீ:

# திருப்பாற்கடல் (க்ஷீராப்தி) - ஆழ்வார்கள் அநுபவம்

(அப்ராக்ருத திவ்யதேசம்)

*ஆசிரியர்: ஒப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ வரதாசாரி சடகோபன்*

(Editor-in-Chief of eBooks at www.sadagopan.org)

******

## *நூலாசிரியர் முன்னுரை*

****

விஜய வருஷம் - தை – ஸ்ரீதூப்புல் அநுஷ்டான குள உத்ஸவ தினம் - 22nd January 2014

அன்புள்ள ஆஸ்திக அன்பர்களுக்கு,

அடியேனின் தாஸஸ்ய விஞ்ஞாபனம். இன்று ஸ்ரீதூப்புல் திவ்ய தேசத்தில் அநுஷ்டான குள உத்ஸவம் மிக விமரிசையாக கொண்டாடப்படுகிறது. இந்த உத்ஸவத்தின் தாத்பர்யத்தை, தூப்புல் வித்வான், ஸ்வாமி தேசிகப்ரியர், உ.வே. கோடி கன்யகாதானம் Dr. ஸ்ரீ சடகோப தாதாசார் ஸ்வாமி மிக அழகாக விளக்கியுள்ளார். அவர் எழுதியது பின்வருமாறு:

திருவத்யயனோத்ஸவத்தை திருமங்கைமன்னன் உபக்ரமித்து வைக்க, காலக்ரமத்தில் விக்னமேற்பட ஸ்ரீமந்நாதமுனிகள், ஸ்ரீபாஷ்யகாரர் நடத்தி வைக்க, மீண்டும் விக்னமேற்பட தற்சமயம் நடைபெறும் திருவத்யயநோத்ஸவம் ஸ்வாமி தேசிகனால் மீண்டும் உபக்ரமிக்கப்பட்டு நிர்விக்நமாக நடைபெற்றுவருகிறது. இது ஒன்றே போதும் எடுத்து காட்ட ஸ்வாமி தேசிகனுக்கு எத்தனை பக்தி, ஆழ்வார்கள் திருவடிகளில் அருளிச்செயல்களில் என.

மேலும் ஸ்வாமி தேசிகன், ஆழ்வார்களெல்லாம் நித்யஸூரிகள் என்று ஸாதிப்பதும், செய்யதமிழ்மாலைகள் நாம் தெளிய ஓதி தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே, சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்தகுரு என தன்னை குறிப்பிடுவதும் ஸ்வாமிக்கு ஆழ்வார்களிடத்தும், அவர்களின் அருளிச் செயல்களிலும் உள்ள பக்தியை நன்கு புலப்படுத்துகிறது. ஸார்வபௌமர்களின் மாநாடான ஸ்ரீதேசிகப்ரபந்தசாத்துமறை

தினம் அனுஷ்டாந குள உத்ஸவ தினமாகும்.

## ஸார்வபௌமர்களின் மாநாடு

தேவதாஸார்வபௌமன் - அஹமேவ பரம் தத்வம் என ஸாதித்த நம்மத்திகிரித்திருமால்.

அக்னிரவமோ தேவதாநாம் விஷ்ணுஃ பரமஃ என ச்ருதி.அதையே வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன் திருவாய்மொழியில் நான்காம் பத்தில் ஒன்றும் தேவும் பதிகத்தால் எம்பெருமானே தேவதாஸார்வபௌமன் என ஸாதிப்பதாக தாத்பர்யரத்னாவளியில்--- ப்ராஹ ஸர்வாமரோச்சம் என குறிப்பிடுகிறார்.

யதிஸார்வபௌமர் - ஸ்ரீபாஷ்யகாரர்.

யதிஸார்வபௌமபதஸாத்க்ருதாசயாஃ என யதிராஜஸப்ததி.

குருஸார்வபௌமர் - ஸ்வாமி தேசிகன்.

ஸ்ரீவேங்கடேசம் குருஸார்வபௌமம்
சேதஸ்ஸதிரம் பாவய ஸௌம்யரூபம்
என ஸ்ரீதேசிகவிக்ரஹத்யாநத்தில் ஸ்ரீகுமாரவரததேசிகன்.

ஆக இவர்களின் மாநாடு நடைபெறும் தினம். அனுஷ்டாநகுள உத்ஸவதினம், இடம், ஸ்ரீதூப்புல்.

அன்று, காண்தகுதோளண்ணல், தென்னத்தியூரரின் கழலிணைக்கீழ் பூண்டவன்பாளனாம் நம் இராமானுசமுனி, வண்மை போற்றும் சீர்மையன் நம் தூப்புல் பிள்ளை, இம்மூவரின் சேர்த்தி, விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாய ப்ரவர்தக, ஸ்தாபக, ரக்ஷகர்களின் சேர்த்தியாகும்.

न दैवं देशिकात्परम् न परं देशिकार्चनात्।
श्रीदेशिकप्रियः

இந்த ஸந்தோஷமான சுப தினத்தில் அடியேனுடய ஸமர்ப்பணமாக இந்த மின் - புஸ்தகத்தை வெளியிடுவதை அடியேனின் பாக்கியமாக கருதுகிறேன்.

முன்பு IBM என்கிற ஸ்தாபனத்தில் உத்யோகத்திலிருந்த போது 1992 செப்டம்பர் தொடங்கி மார்ச் 1993 வரை வேலை நிமித்தமாக பல வெளிநாடுகளுக்கு ப்ரயாணம் செய்து கொண்டிருந்த வேளையில் பகவத் சிந்தனை விடாமலிருக்க 108 திவ்ய தேசங்களைப்பற்றியும், ஆழ்வார்களின் அருளிச் செயல்களைப் பற்றியும், வேத வேதாந்தங்களைப் பற்றியும் ஏற்பட்ட எண்ணங்களின் கருத்து-கோவையை ஒரு நூல் வடிவமாக எழுதியது நேற்று நடந்தது போல் பசுமையாக நினைவில் நிற்கிறது.

பகவத்-பாகவத-ஆசார்ய கடாக்ஷங்களினால் இப்போது அந்த நூலில் இருந்து ஒரு பகுதியாக, அப்ராக்ருத திவ்ய தேசமான திருப்பாற்கடல் (க்ஷீராப்தி) திவ்ய தேசம் பற்றி ஆழ்வார்களின் மங்களாசாஸனங்களை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

||ஆழ்வார் எம்பெருமானார் ஆசார்யர் திருவடிகளே சரணம்||

தாஸன்
ஒப்பிலியப்பன் கோவில் வரதாசாரி சடகோபன்





ஸ்ரீ அநந்தபத்மநாப ஸ்வாமி – திருவநந்தபுரம் (நன்றி: சௌ ஸ்வேதா சுந்தரம்)

ஸ்ரீ:

# திருப்பாற்கடல் (க்ஷீராப்தி) - ஆழ்வார்கள் அநுபவம்

(அப்ராக்ருத திவ்யதேசம்)

*ஆசிரியர்: ஒப்பிலியப்பன் கோயில் ஸ்ரீ வரதாசாரி சடகோபன்*

(Editor-in-Chief of eBooks at www.sadagopan.org)

*******

நில உலகில் பார்க்க முடியாத திருப்பதிகள்: திருப்பாற்கடல் (க்ஷீராப்தி) – 107வது திவ்ய தேசம்

இந்தத் திருப்பதியும், ஸ்ரீ வைகுண்டம் என்ற கடைசித் திருப்பதியும் மனிதர்களால் நில உலகில் காண முடியாதவை. இவைகளை, விண்ணோர்களும், மஹர்ஷிகளும், ஆழ்வார்களும், யோகிகளும் தங்கள் தபோ பலத்தால் கண்டு அனுபவிக்கிறார்கள் எனச் சொல்வார்கள்.



ஸ்ரீ அத்தி வரதர் – திருக்கச்சி (நன்றி – ராமாநுஜ தாசர்கள்@pbase.com)

திருப்பாற்கடலில், க்ஷீராப்தி நாதன், கடல் மகள் நாச்சியாருடன் வ்யூஹ மூர்த்தியாய் ஸேவை தருகிறான். தெற்கு திசை நோக்கி புஜங்க சயனத் திருக்கோலத்தில், சூக்ஷ்ம

த்ருஷ்டியுடையவர்களுக்கு ஸேவை தருகிறான். அஷ்டாங்க விமான நிழலில், அம்ருத தீர்த்தக் கரையில், கோயில் கொண்டுள்ள க்ஷீராப்தி நாதனை பத்து ஆழ்வார்கள் 51 பாசுரங்கள் மூலம் மங்களாஸாசனம் செய்துள்ளனர். திருப்பாற்கடலில் கோயில் கொண்டுள்ள சமயம், தேவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி, வ்யூஹ மூர்த்தி பல அவதாரங்களை எடுத்தார். இந்த மாதிரி துஷ்ட நிக்ரஹ / சிஷ்ட்ட பரிபாலனத்திற்காக அவதாரங்களை எடுத்த க்ஷீராப்தி நாதனை, பெரியாழ்வார், "பன்றியும் ஆமையும் மீனமுமாகிய பாற்கடல் வண்ணா" என அழைத்து ஆனந்தித்தார்.

அநேகமாக, மற்ற அர்ச்சா மூர்த்திகளை மங்களாஸாசனம் செய்யும் சமயம், வ்யூஹ மூர்த்தியான க்ஷீராப்தி நாதனை ஆழ்வார்கள் ஸேவித்துக் கொள்வார்கள். உதாரணமாக ஸ்ரீ ரங்கநாதனை மங்களாஸாசனம் செய்யும் சமயம், ஆதிசேஷன் மேல் சயனித்துக் கொண்டிருக்கும் பரம மூர்த்தியை, நான்முகனை நாபி கமலத்தில் தோற்றுவித்து, அவருக்கு படைத்தல் என்ற அதிகாரத்தை அளித்து, உலகத்தை உய்ய வைத்ததை, பெரியாழ்வார் பின் வருமாறு கொண்டாடினார்:



ஸ்ரீரங்கநாதர் - ஸ்ரீரங்கம்

பையரவினணைப் பாற்கடலுள் பள்ளி கொள்கின்ற பரமமூர்த்தி,
உய்யவுலகு படைக்க வேண்டி உந்தியில் தோற்றினாய் நான்முகனை,
வைய மனிசரைப் பொய்யென்றெண்ணிக் காலனையுமுடனே படைத்தாய்,
ஐய இனியென்னை காக்க வேண்டுமரங்கத்தரவணை பள்ளியானே

மற்ற ஒரு பாசுரத்தில், ஞானத்ருஷ்டியாய், நீ திருப்பாற்கடலில், திருவனந்தாழ்வான் என்ற மெத்தை மேல் யோக நித்ரை புரிவதைக் காணக் கூடுமோ என்ற ஒரு ஆசை மிகுந்து, அந்த சிந்தனை பற்றிய ஆனந்தானுபவத்தால், நாக்குழறி, மயிர் சிலிர்த்து, கண்ணீர் சோர்ந்து, நித்ரையை அடியோடு விட்டு நான் ஏங்கி நிற்கிறேன். இப்படி க்ஷீராப்தி ஸேவை தேடி நிற்கும் எனக்கு அந்த ஸேவையை அளி எனப் பின் வருமாறு பெரியாழ்வார் வேண்டினார்:

வெள்ளை வெள்ளத்தின் மேல் ஒரு பாம்பை மெத்தையாக விரித்து,
அதன் மேலே கள்ள நித்திரை கொள்கின்ற மார்க்கம் காணலாங்கொல்
என்று ஆசையினாலே,
உள்ளம் சோர உகந்து எதிர் விம்மி உரோம கூபங்களாய்,
கண்ண நீர்கள் துள்ளம் சோரத் துயிலணை கொள்ளேன் சொல்லாய்
நான் உன்னை தத்தறுமாறே.

பெரியாழ்வாரின் பிரார்த்தனைக்கிணங்கி, திருவனந்தாழ்வான் என்ற படுக்கையோடும், அழகிய திருப்பாற்கடலுடனும், நித்ய சூரிகளுடனும், க்ஷீராப்தி நாதன், அரவிந்தப் பாவையாகிற பெரிய பிராட்டி ஸமேதராக, பெரியாழ்வாரின் சரீரத்துள்ளே புகுந்தருளினார். தன் ஹ்ருதயாகசத்தில், பாற்கடலின் அலைக் கூட்டங்கள் மோத அமைதியுடன் சயனித்திருக்கும் க்ஷீராப்தி நாதனைக் கண்டு பின் வரும் பாசுரம் மூலம் போற்றி தனக்கு ஆத்ம ரக்ஷணம் நிலைத்து விட்டது என பெரியாழ்வார் தெரிவித்தார்.

அரவத்ததமளியினோடும் அழகிய பாற்கடலோடும்,
அரவிந்தப் பாவையும் தானும் அகம்படி வந்து புகுந்து,
பரவைத் திரை பல மோதப் பள்ளி கொள்கின்ற பிரானை,
பரவுகிறான் விட்டுசித்தன் பட்டினங்காவற் பொருட்டே.

குளிர்ந்த திருப்பாற்கடலில் ஸௌக்யத்துடன் பள்ளி கொள்வதை விட்டு, ஓடி வந்து, என்

ஹ்ருதயமாகிற கடலில் விரும்பி பள்ளி கொண்ட மாயாவியே! பெரிய பிராட்டியின் நாதனே! ஸகல கல்யாண குணங்களும், நிறைந்த நம்பியே! இணையில்லாத மஹிமை கொண்ட திருப்பாற்கடல், ஆதித்ய மண்டலம், பரமபதம் ஆகிய மூன்று ஸ்தானங்களையும் த்யஜித்து (ஒதுக்கி விட்டு), மிகவும் தாழ்மையான உள்ள என் உள்ளக் கோயிலை உனது இருப்பிடமாக ஏற்றுக் கொண்டு அருளியுள்ளாயே! இது எப்பேற்பட்ட சௌசீல்யம் என்பதை என்னால் விவரிக்க முடியவில்லை எனப் பின் வருமாறு சொன்னார்:

பனிக்கடலில் பள்ளி கோளைப் பழகவிட்டு, ஓடி வந்தென்
மனக்கடலில் வாழவல்ல மாயமணாள நம்பீ!
தனிக்கடலே! தனிச் சுடரே! தனியுலகே என்றென்று,
உனக்கிடமாமயிருக்க என்னை உனக்கு உரித்தாக்கினையே.

பனிக் கடலில் பள்ளி கொண்டுள்ளான் என்று ஆழ்வார் சொல்வதை அனுசரித்து, பாற்கடல் என்பது பனிப் பாளங்களால் மூடப்பட்ட வட துருவம் என்று சிலர் சொல்வார்கள்.

பெரியாழ்வார் பெண்ணான ஆண்டாள், திருப்பாவையின் இரண்டாவது பாசுரத்தில், பாவை நோன்பு நூற்க பாவையர்கள் செய்யும் கிரிசைகளை விவரிக்கும் சமயத்தில் க்ஷீராப்தி நாதனைப் பின் வருமாறு மங்களாஸாசனம் செய்தாள்:

வையத்து வாழ்வீர்காள் நாமும் நம் பாவைக்கு
செய்யும் கிரிசைகள் கேளீரோ, பாற்கடலுள்
பையத்துயின்ற பரமனடிப் பாடி,
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி,
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்.
செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்,
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி,
உய்யுமாறெண்ணி உகந்தலோரெம்பாவாய்.

நாச்சியார் திருமொழிப் பாசுரம் ஒன்றில், ஆண்டாள், "தெண்டிரைக் கடற் பள்ளியாய் எங்கள் சிற்றில் வந்து சிதையேலே" என்று பிரார்த்திக்கும் சமயம் க்ஷீராப்தி நாதனை

மங்களாஸாசனம் செய்தாள். தெளிந்த அலைகள் கொண்ட திருப்பாற்கடலில் சயனித்திருப்பவனே! எங்கள் மணல் வீடுகளை அழிக்காதே என்று இங்கு வேண்டிக் கொண்டாள்.



ஸ்ரீகோவிந்தராஜர் – முல்பகல்-கர்நாடகா (நன்றி: ஸ்ரீ லக்ஷ்மிநரசிம்ஹன் ஸ்ரீதர்)

நாச்சியார் திருமொழியின் குயிற் பத்துப் பகுதியில், ஆண்டாள், தான் க்ஷீராப்தி நாதனை புணர்வது என்ற ஆசை அதிகரித்து, எனது ஸ்தனங்கள் பருத்து, மிக்க உத்ஸாகம் கொண்டு, எனது ஆவியை உருக்கி வ்யாகூலப் படுத்துகின்றன என்றாள். குயிலே, நான் இந்த வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் இச்சமயம், நீ ஒளிந்து மறைந்திருப்பதால் எனக்கு உபயோகம் இல்லை. ஸுதர்சனம், பாஞ்சஜன்யம், கௌமேதகம் ஆகிய ஆயுதங்களை தன் கைகளில் அணிந்திருக்கும் பெருமானை இங்கு வரும்படிக் கூவினால், உனக்கு புண்ணியமாகும் என கோதாப் பிராட்டி பின் வருமாறு கேட்டுக் கொண்டாள்:

பொங்கிய பாற்கடல் பள்ளி கொள்வானைப்
புணரவதோராசையினால், என்
கொங்கை நிறைந்து குமைத்துக் குதுகலித்து
ஆவியை ஆகுலம் செய்யும்,
அங்குயிலே! உனக்கென்ன மறைந்துறைவு
ஆழியும் சங்கும் ஒண்தண்டும்,
தங்கிய கையவனை வரக்கூவில்
நீ சாலத்தருமம் பெறுதி.

குலசேகரர் வணங்கும் க்ஷீராப்தி நாதன்

திருப்பாற்கடலில் சயனித்திருக்கும் திருத்துழாய் மாலை மார்வனை பக்தி மிகுதியால் ஆடிப் பாடும் தொண்டர்கள் கோஷ்டியில் சேர, தன் நெஞ்சு மிகுந்த ஆசையுடன் இருக்கிறது என குலசேகரர், ஸ்ரீ ரங்கநாதனைப் பற்றித் தான் இயற்றிய ஒரு பாசுர மூலம் சொன்னார். இப் பாசுரம் பின் வருமாறு:

மாலையுற்ற கடல் கிடந்தவன் வண்டு கிண்டு நறுந்துழாய்
மாலையுற்றவரைப் பெருந்திரு மார்வனை மலர்க் கண்ணனை
மாலையுற்றெழிந்தாடிப் பாடித் திரிந்தரங்கன் எம்மானுக்கே
மாலையுற்றிடும் தொண்டர் வாழ்வுக்கு மாலையுற்றது என் நெஞ்சமே.

திருவேங்கட மலையில், பகவான் ஸாமீப்யத்தை வேண்டி, அங்கு குருகாய் பிறக்கும் பாக்யம் கிட்டுமா? வேங்கடவன் சுனையில் மீனாய் பிறக்கும் விதியுடையவனாக ஆவேனா? அங்கு படியாய் கிடந்து உன் பவள வாய் காண்பேனே! எம் பெருமான் பொன்மலை மேலே ஏதேனுமாவேனே என்றெல்லாம் சொல்லும் போது, ஒரு பாசுரத்தில், திருப்பாற்கடல் நாதனை பின் வருமாறு மங்களாஸாசனம் செய்தார்:

ஒண்பவள வேலையுலவு தண் பாற்கடலுள்
கண் துயிலும் மாயோன் கழலிணைகள் காண்பதற்கு
பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து
செண்பகமாய் நிற்கும் திருவுடையேனாவேனே.



ஸ்ரீரங்கநாதர் (ஆதிரங்கம்) – ரங்கபட்டினம் (நன்றி:divyadesamyatra.blogspot.com)

தனது திருமாலை பாசுரம் ஒன்றில், தொண்டரடிப்பொடி, ஆதிசேஷன் மேல் சுகமாக சயனித்திருக்கும் தாமரைக் கண்ணன் தனிக்கிடந்து அரசு செய்வதை கொண்டாடுகிறார். அவருடைய கோவைச் செவ்வாய், தாமரைக் கண்களை கண்டபின், கண்களில் ஆனந்த பாஷ்பம் பொங்கி, மேலே அவனை ஸேவிக்க முடியாது, கண்ணீர் கண்ணை மறைப்பதைக் கூறி, இம்மாதிரி தடை ஏற்படும் பாவம் செய்தவனாக உள்ளதை நினைத்து வருத்தப்பட்டு, பின் வரும் பாசுரத்தை அளித்தார்:

இனித் திரைத் திவலை மோத வெறியும் தண் பரவை மீதே,
தனிக்கிடந்தரசு செய்யும் தாமரைக் கண்ணனெம்மான்,

கனியிருந்தனைய செவ்வாய் கண்ணனைக் கண்ட கண்கள்.

பனியரும்பு திருமாலோ என் செய்கேன் பாவியேனே.

## பொய்கையாழ்வார் அனுபவித்த க்ஷீராப்தி நாதன்

முதல் திருவந்தாதியின் இருபத்தைந்தாவது பாசுரத்தில், பொய்கை "திரை மேல் எப்போதும் கிடந்தானை" பின் வருமாறு நமஸ்கரித்துக் கொண்டார்:

உரை மேற்கொண்டு என் உள்ளம் ஓவாது எப்போதும்
வரை மேல் மரகதமே போல - திரை மேல்
கிடந்தானைக் கீண்டானைக் கேழலாய்ப் பூமி
இடந்தானை ஏத்தி எழும்.

என் மனது, திருப்பாற்கடல் என்ற அலை மோதும் கடலில், ஆனந்த சயனம் செய்து கொண்டிருக்கும் அப்பனை, ஓயாமல் ஸ்த்வார்த்தைகள் மூலம் துதித்துக் கொண்டே இருக்கும் என்றார். ஆதிசேஷன் மேல், ஒரு மரகத மணி போல் பச்சை பசேல் என்று ஒளி வீசக் கிடந்திருக்கும் க்ஷீராப்தி நாதன் தான், முன்னர் இரண்யனையும், பகாசுரன் என்று கொக்கு ரூபத்தில் வந்த துஷ்டனையும், பூமி தேவியை திருடி, ஸமுத்ரத்தில் ஒளித்த இரண்யாக்ஷனையும் வராஹவதார சமயம் வதம் செய்தவன் என்றார். அவனுடைய அவதார லீலைகளையும், கல்யாண குணங்களையும் அனுசந்தித்து, உயர்வு அடைவேன் என்று பொய்கை இங்கு சொன்னார்.

## பூதத்தாழ்வார் அனுபவித்த க்ஷீராப்தி நாதன்

திருக்கடல் மல்லையில் பிறந்து, ஸமுத்ரத்தை பிறந்த தினத்திலிருந்து பார்த்து வந்த பூதத்தாழ்வார், "அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தையிடு திரியா, நன்புருகி ஞானச்சுடர்" விளக்கை நாரணற்காக ஞானத் தமிழ் மூலம் ஏற்றும் போதும் இரண்டு பாசுரங்களை க்ஷீராப்தி நாதன் என்ற பாற்கடல் வண்ணனின் மங்களாஸாசனத்திற்கு உபயோகப்படுத்தினார். அவை பின் வருமாறு:

பரிசு நறு மலரால் பாற்கடலான் பாதம்,

புரிவார் புகப் பெறுவர் போலாம் - புரிவார்கள்

தொல்லமரர் கேள்வித் துலங்கொளி சேர் தோற்றத்து,
நல்லமரர் கோமான் நகர். --- இரண்டாம் திருவந்தாதி, 3வது பாசுரம்

மனத்துள்ளான் வேங்கடத்தான் மாகடலான், மற்றும்
நினைப்பரிய நீளரங்கத்துள்ளான் - எனைப் பலரும்
தேவாதி தேவெனெனப் படுவான், முன்னொரு நாள்
மாவாய் பிளந்த மகன். --- இரண்டாம் திருவந்தாதி, 28வது பாசுரம்



ஸ்ரீரங்கநாதர் – மத்யரங்கம் (நன்றி: www.wikipedia.org)

திருப்பாற்கடலில், அப்ராக்ருதமாய், மனிதர்கள் கண்ணுக்கு புலப்படாத வ்யூஹ மூர்த்தி, அநிருத்தன் என்ற அம்ச முகமாக ராமன், க்ருஷ்ணன் என்ற விபவாதி ரூபங்களை எடுத்து பூமியில் நடமாடி, ஜனங்களுக்கு மங்களங்கள் புரிந்தான். அந்த க்ஷீராப்தி நாதன் என்ற ஆதி மூலத்தை த்யானித்து, ஸ்ரீரங்கம் போன்ற சயனத் திருப்பதிகளில் அர்ச்சையாக

எழுந்தருளியிருக்கும் மூர்த்தியை உயரிய மணமுள்ள புஷ்பங்களாலும், துளஸீத் தளங்களாலும் அர்ச்சிப்பவர், ப்ரஹ்மமா போன்ற புராதன தேவர்கள் ஸேவிக்கும். "அலங்குளி ஒளி சேர் கோமான் நகர்" என்ற ஜாஜ்வல்யமான ஸ்ரீ வைகுண்டத்தை அடைந்து, நித்ய சூரிகளுடன் சேர்வர் என்று முதல் பாசுரத்தில் சொன்னார்.

பரவாஸுதேவனின் ஒரு அவதாரம் அநிருத்தன். பரவாஸுதேவனே அநிருத்தாம்சமாய் விபவாதி அவதாரங்களை செய்கிறான் என்று மேலே சொன்னேன். க்ருஷ்ணாவதாரம் என்ற விபவத்தில் கேசி என்ற குதிரையின் வாயைப் பிளந்த வஸுதேவ புத்ரனனே, பரவாஸுதேவ மூர்த்தியின் அவதாரம் என்று ஆழ்வார் இங்கு சொன்னார். அவன் தான் "மாவாய் பிளந்த மகன்" என்றார். ஹ்ருதயங்களின் குகைகளில் அந்தர்யாமியாகவும், ஸர்வகர்ம ஸாக்ஷியாய், ஹார்த்தனாய், மனத்துள்ளான் அவனே; வ்யூஹமாய் திருப்பாற்கடலில் சயனித்துருப்பவனும் அவனே; காவேரிக் கரையில் நித்ய விபூதி என்று ஸ்ரீரங்கத்தில் சயனித்துக் கொண்டிருப்பவனும் அவனே என்று ஆழ்வார் தெரிவித்தார். அந்த தேவாதி தேவன் என மனதில் நிறைந்துள்ளான் என்றார்.



ஸ்ரீரங்கநாதர் – ரங்கஸ்தலம் – கர்நாடகா (நன்றி:ராமாநுஜ தாஸர்கள்@pbase.com)

### பேயாழ்வார் ஸேவித்துக் கொண்ட திருப்பாற்கடல் மூர்த்தி

“திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன், திகழும் அருக்கனணி நிறமும் கண்டேன், செருக்கிளரும் பொன்னாழி கண்டேன், புரிசங்கம் கைக் கண்டேன், என்னாழி வண்ணன் பாலின்று” என திருக்கோவலூர் இடைக்கழியில் பகவத் ஸ்வரூப தர்சன பாக்யம் பெற்று, “இன்றே கழல் கண்டேன், ஏழ் பிறப்பும் யானறுத்தேன்” என்று சொல்லி புளகாங்கிதம் அடைந்த பேயாழ்வார் நான்கு பாசுரங்கள் மூலம் க்ஷீராப்தி நாதனை மங்களாஸாசனம் செய்தார். அவை மூன்றாம் திருவந்தாதியின் 11, 31, 32, 61வது பாசுரங்கள். முதலாவது பாசுர வாக்கியங்கள் பின் வருமாறு:

நன்கோதும் நால் வேதத்துள்ளான் நற விரியும்
பொங்கோதருவிப்புனல் வண்ணன் - சங்கோதப்
பாற்கடலான் பாம்பணையான் பயின்றுரைப்பார்
நூற்கடலான் நுண்ணறிவினான்.

ஸ்வரம் தவறாது ஓதப்படும் வேதங்களின் உட்பொருளாய் அவன் விளங்குகிறான். அதன்படி “நன்கோதும் நால் வேதத்துள்ளானாகிறான்”. நறவு இரியும் ஸ்வபாவமுடையனுமாகிறான். அதாவது ருசியில், தேனும் தோல்வியடையும் இனிய ருசியுடையவனாகிறான். அந்த தேனினும் இனிய பிரானின் கல்யாண குணங்களை சுவைப்பவர்கள், ச்வேதாச்வதரோபநிஷத் கூறும் வகையில் அம்ருதம் உண்ட தேவர்கள் போல் ஆகி (ய ஏதத் விது: அம்ருதா: தே பவந்தி), பிறப்பொழிந்தவராவர்.

அவன் பொங்கும் கடல் போல் மேன் மேலே எழுந்து பக்த ரக்ஷணம் செய்வான். தன் பக்தனை துன்புறுத்தவர்களை, சீற்றத்துடன் கடல் அலைகள் எழுந்து நகரங்களை அழிப்பது போல் அழிப்பான். ருக் வேத மந்த்ரம் பின் வருமாறு தெரிவிக்கும் வகையில், ஒரு த்ருட பக்தனுக்காக, நூற்றுக் கணக்கான கோட்டை கொத்தளங்கள் கொண்ட நகரங்களை அழித்து அந்த பக்தனை கேடுகள் வராது காக்கும் “பொங்கு ஓதம் நீ” என்று ஆழ்வார் வேத ஸாரமாக சொன்னார். இக் கருத்துடன் சேர்ந்த ருக் வேத மந்த்ரம் பின் வருமாறு:

शतमश्मन्मयीनां पुरामिन्द्रो व्यास्येत्। दिवो दाशाय दाशुषे ॥

சதமச்மந்மயீநாம் புராமிந்த்ரோ வ்யாஸ்யேத் | திவோ தாசாய தாசுஷே ||

அடுத்த படியாக, ஆழ்வார், நீ “அருவி புனல் வண்ணன்” என்று நமஸ்கரித்துக் கொண்டார். இதுவும் வேத ஸாரமான நமஸ்காரம். பின் வரும் ருக் வேத மந்த்ரம், மலையருவி போல் (அருவி புனல் நீர் போல்), கிடு கிடுவென கீழ் நோக்கி ப்ரவஹித்துக் கொண்டு, பகவான் ஸ்ரீ வைகுண்டம் என்ற பரமாகாசத்திலிருந்து பக்தர்கள் ஆராதிக்கும் இடங்களுக்கு வந்து, அங்கு விரும்பி வாழ்வதை ஸேவித்துக் கொள்கிறது. ஒரு பக்தன் மானஸ பூஜையில் ஈடுபட்டு,

हरिरैव गतिर्हरिमेव भजे हरिणैव सहास्मि नमो हरयेः।
न हरेः परमं शिशुरस्मि हरेः मतिरस्ति हरौ मम पाहि हरेः॥

ஹரிரைவ கதிர்ஹரிமேவ பஜே
ஹரிணைவ ஸஹாஸ்மி நமோ ஹரயே: |
ந ஹரே: பரமம் சிசுரஸ்மி ஹரே:
மதிரஸ்தி ஹரௌ மம பாஹி ஹரே: ||

என்று சொல்லி, உன் திருவடி த்யானத்தில் மறந்து நிற்பான்.

மற்ற ஒரு பக்தன், “நாவற் பழங் கொண்டு வைத்தேன், இவை காணாய் நம்பீ” என்று ஒரு சமயம் உனக்கு நைவேத்யம் செய்வான். மற்ற ஒரு சமயம் “நம்பீ, பேர்த்தும் பெரியன அப்பம் தருவேன்” என்பான். இன்னும் ஒரு சமயம் “செந்நெல் அரிசி சிறு பருப்புச் செய்த அக்காரம் நறு நெய் பாலால் செய்து”, உன்னுடைய திருவோண தினத்தில் ஸமர்ப்பிப்பான். மற்ற ஒரு பக்தன் உன்னை “உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம்” நீ தான் என்று அனுபவிப்பான்.

இப்படியாக உன்னை அனுபவிப்பவர் இடங்களுக்கெல்லாம் “மலை அருவிப் புனல் நீர் போல்” வெகு வேகத்துடன் நீ இறங்கி வருவதை –

प्रवता हि क्रतूनामा हा पदेव गच्छसि

ப்ரவதா ஹி க்ரதூநாமா ஹா பதேவ கச்சஸி

என்ற ருக் வேத மந்த்ரம் விளக்குகிறது.




பள்ளிகொண்டபெருமாள் – ஸ்ரீலக்ஷ்மிநரசிம்ஹ ஸ்வாமி ஆலய புஷ்கரிணி – செரியல்- கீசர மண்டல் – ஆந்திர மாநிலம் (நன்றி: ஸ்ரீமதி ச்யாமளா க்ருஷ்ணன்)

“நன்கோதும் நால் வேதத்துள்ளான், நறவிரியும் பொங்கோதருவிப் புனல் வண்ணன்” சங்குகளை கரையில் அடித்துத் தள்ளும் வெண் திரைகள் மோதும் திருப்பாற்கடலில், ஆதிசேஷன் மேல் சயனித்திருக்கிறான் என்பார்கள். “சங்கு ஓதும் பாற்கடலான் பாம்பு அணையான் பயின்று உரைப்பார்” என்பது இக் கருத்துக்கள் கொண்ட பாசுர வாக்கியங்கள். அப்பேற்பட்டவன் வேதங்கள், சாஸ்த்ரங்கள் என்ற அலைகள் மோதும் கடலில் “நூல் கடலான்” என்ற பெயருக்கு ஏற்ப பள்ளி கொண்டுள்ளான். அவனைப் பற்றிய ஞானம் ஸாதரணமானது அல்ல. அவன் சூக்ஷ்மமான அறிவுக்கு இடமாகிறான் (நுண் அறிவினான்). என்று பேயாழ்வார் நமஸ்கரித்துக் கொண்டார்.

மூன்றாம் திருவந்தாதியின் 31வது பாசுரத்தில், இரண்யனை வதம் செய்ய நரசிங்க உருவெடுத்தவன், திருப்பாற்கடலில் மேல், ஆதிசேஷன் என்ற படுக்கையில் சயனித்துள்ளவன் தான் என்று பின் வருமாறு சொன்னார்:

இவையவன் கோயிலிரணியனதாகம்,
அவை செய்தரியுருவமானான் - செவி தெரியா
நாகத்தான் நால் வேதத்துள்ளான் நறவேற்றான்,
பாகத்தான் பாற்கடலுளான்.

முப்பதாவது பாசுரத்தில், திருக்குடந்தை, திருவேங்கடம், திருப்பாடகம் அவனுடைய ராஜதானிகள் என்பதை "குடந்தை வேங்கடம் … பாடகம் … வண் துழாய் கண்ணி அனந்தன் இறை பாடி ஆய இவை" என்று விளக்கினார். முப்பத்தொன்றாவது பாசுரத்தில், கீழ் சொன்ன கோயில்களில் அர்ச்சையாக இருப்பவன், திருப்பாற்கடலில் ஆதிசேஷன் என்ற பெரும் நாகத்தின் மேல் யோக நித்ரை புரிபவன் தான் என்றார். அவனே நால் வேதத்துள் இருந்து, நன்மை நிறைந்த வ்ருஷப வாஹனான ருத்ரனுக்கும், தனது உடலில் ஒரு பாதி கொடுத்தான் என்று அறிவித்தார். காது பிறரால் காண முடியாத ஆதிசேஷன் மேல் உள்ளவனை முக்கியமாக கொண்டாடினார்.

முப்பத்திரண்டாவது பாசுரத்தில், கண்ணனாக அவதரித்து குருந்த மர ரூபமாக இருந்த அசுரனை ஒடித்து, ஒழித்த பரமனே திருப்பாற்கடலையும், திருவேங்கடத்தையும், குளிர்ந்த பரமபதத்தையும் திருவனந்தாழ்வானையும், சாஸ்த்ரங்களாகிற ஸமுத்ரத்தையும், நுண்ணிய நூல்களைத் தண்டில் உடைய தாமரைப் பூவில் வசிக்கும் மலர் மகளின் மனத்தையும் தனது வாசஸ்தலங்களாக கொண்டுள்ளான் எனப் பின் வருமாறு கூறினார்:

பாற்கடலும் வேங்கடமும் பாம்பும் பனி விசும்பும்,
நூற்கடலும் நுண்ணூல் தாமரை மேல் - பாற்பட்டு
இருந்தார் மனமும் இடமாகக் கொண்டான்,
குருந்தொசித்த கோபாலகன்.

மூன்றாம் திருவந்தாதியின் 61வது பாசுரத்தில், அனாதி காலமாக, திருவேங்கட மலையையும், திருப்பாற்கடலையும், தான் நித்ய வாஸம் செய்யும் வைகுண்டத்திற்கு சமானமாகி கருதி, அங்கும் நித்ய வாஸம் செய்யும் புராதன மூர்த்திக்கு பிடித்தமான புதுக் கோயில்கள் கடிகாசலம் (சோளிங்கபுரம்), திருவிண்ணகர் என்பவை என்றார். பழைய "கிழ மூர்த்திகள்", திருப்பாற்கடலில் சயனித்துக் கொண்டும், திருவேங்கடத்தில் நின்று கொண்டும் இருக்க, இளங் குமரனாக திருவிண்ணகரில் இருக்கும் ஸ்ரீனிவாஸனையும்,

சுகந்த புஷ்பச் சோலைகள் நிரம்பிய கடிகையில் உள்ள அக்காரக் கனியானையும் விசேஷமாக போற்ற வேண்டும் எனப் பின் வருமாறு சொன்னார்:

பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்,
கொண்டங்குறைவார்க்குக் கோயில் போல் - வண்டு
வளங்கிளரும் நீள் சோலை வண் பூங்கடிகை,
இளங்குமரன் தன் விண்ணகர்.

திருமழிசை ஆழ்வார் அனுபவித்த க்ஷீராப்தி நாதன்

தனது திருச்சந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி என்ற இரு பிரபந்தங்களில் திருமழிசை ஆழ்வார், க்ஷீராப்தி நாதனை பல பாசுரங்கள் மூலம் ஸேவித்துக் கொண்டுள்ளார். முதலாவதாக திருச்சந்த விருத்த மங்களாஸாசனங்களை நமஸ்கரித்துக் கொள்வோம்.

நாகமூர்த்தி சயனமாய் நலங்கடல் கிடந்து, மேல்
ஆகமூர்த்தி ஆய வண்ணம் எங்கொல் ஆதி தேவனே

என்று 17வது பாசுர மூலம், தன் ஆதி தெய்வத்தை அறிமுகப் படுத்தினார்.

பெரும்புலியூர் என்ற ஊரில், தன்னைத் தூஷித்த வேதியர்களின் செறுக்கை அடக்க, “சக்கரங் கொள் கையனே, சடங்கர் வாய் அடங்கிட, உட்கிடந்த வண்ணமே புறம் பொசிந்து காட்டிடே” என்று பிரார்த்தித்தார். என் உள் நீ க்ஷீராப்தி நாதனாக ஸேவை தர வேணும் என்று வேண்டினார். பகவானும், ஆழ்வார் திருமேனியிலே அமர்ந்து, எல்லோரும் ஸேவித்துக் கொள்ளுமாறு ஸாரூப்ய அனுக்ரஹம் செய்தார். ஆதிசேஷன் என்ற மெல்லணையில், திருமகளும், மண் மகளும் திருவடி வருட, கண் வளரும் காட்சியை அனைவருக்கும் காட்டினார். ஆழ்வாரை முன்னர் தூஷித்து, அபராதப்பட்டு நின்ற சடங்கர்கள், அவர் திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்துக் கொண்டனர். இந்த சம்பவம், ஆழ்வாருக்கும், க்ஷீராப்தி நாதனுக்கும் உள்ள நெருங்கிய உறவைக் குறிப்பிடுகிறது.

மற்ற ஒரு பாசுர மூலம், திருப்பாற்கடலில், ஆயிரம் தலை ஆதிசேஷன், தன் வாய்கள் மூலம் அக்னி போன்ற மூச்சுகளை விட்டுக் கொண்டு, தனது படங்களாகிற விதானத்தின்

கீழ், பாற்கடலில் பகவானுக்கு படுக்கையாக விளங்குவதை பின் வருமாறு ஸேவித்துக் கொண்டார்:

விடத்தவாய் ஓராயிரம் இராயிரங்கண் வெந்தழல்,
விடத்து வீள் விலாத போகம் மிக்க சோதி தொக்க சீர்,
தொடுத்து மேல் விதானமாய பௌவநீர் அராவணைப்,
படுத்தபாயல் பள்ளிகொள்வது என் கொல் வேலை வண்ணனே.

இரண்யனை தன் நகங்களால் அழித்தவனும், நான்கு வேதங்களையும் ஓதுவதில் திறமை உள்ளவர்கள் யோக முகமாக வணங்கும் பெருமான் பாற்கடலில் சயனித்திருக்கும் பத்மநாபன் தான், வேறு ஒருவருமில்லை எனப் பின் வருமாறு சொன்னார்:

வானிறத்தொர் சீயமாய் வளந்த வாளெயிற்றவன்,
ஊன் நிறத்துகிர்த்தலம் அழுத்தினாய் உலாய சீர்,
நால்நிறத்த வேதநாவர் நல்ல யோகினால் வணங்கு,
பால் நிறக் கடல்கிடந்த பற்பநாபன் அல்லையே.

அவனைத் தவிர வேறு எவரும் ரக்ஷிக்கக் கூடியவர் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

தான் படைத்த உலகங்களை, த்ரிவிக்ரமவாதார சமயம் அளந்து, ப்ரளய காலத்தில் அந்த உலகங்களை உண்டு, ப்ரளயம் அடங்கியதும் பின் அவைகளை வெளிப்படுத்தி (உமிழ்ந்து), திருப்பாற்கடலில் சயனித்து, அதன் பின் அத் திருப்பாற்கடலைக் கடைந்து அம்ருதத்தையும், மஹாலக்ஷ்மியையும் தோற்றுவித்த விஷயங்களை பின் வரும் பாசுர மூலம் கொண்டாடினார்:

படைத்த பாரிடந்தளந்து அதுண்டுமிழ்ந்து பௌவநீர்,
படைத்தடைத்ததில் கிடந்து முன் கடைந்த பெற்றியோய்,
மிடைத்த மாலி மாலிமான் விலங்கு காலனூர் புக,
படைக்கலம் விடுத்த பல்படைத் தடக்கை மாயனே.

மற்ற ஒரு பாசுரத்தில். திருப்பாற்கடல் நாதனை, “கடைந்த பாற்கடல் கிடந்து, ....

வேங்கடம் அடைந்த" மாலாக திருமழிசை வணங்கிக் கொண்டார். அந்த திருமாலின் "பாதமே அடைந்து நாளும் உய்ம்மினோ" என்று உபதேசம் செய்தார்.

இன்னும் ஒரு திருச்சந்த விருத்த பாசுரத்தில், ஆயனாக அவதரித்த சமயம், ஏழு எருதுகளை அடர்த்து, நப்பின்னையை பரிசாக பெற்றதையும், ராஸக்ரீடை செய்ததையும் கூறி, சமுத்ரத்தை படைத்து, அணை கட்டி, அதன் மேல் சயனித்து இருந்த திருப்பாற்கடலானைப் பின் வருமாறு ஸேவித்துக் கொண்டார்:

விடைகுலங்களேழடர்த்து வென்றி வேற்கண் மாதரார்,
கடிக்கலந்த தோள் புணர்ந்த காலியாய வேலை நீர்,
படைத்தடைத்திற் கிடந்து முன் கடைந்து நின்றனக்கு,
அடைக்கலம் புகுந்த என்னை அஞ்சலென்ன வேண்டுமே.

திருமழிசை தனது நான்முகன் திருவந்தாதியின் நான்கு பாசுரங்களில், திருப்பாற்கடல் எம்பெருமானை மங்களாஸாசனம் செய்தார். முதல் பாசுரம் பின் வருமாறு:

பாலில் கிடந்ததுவும் பண்டரங்கம் மேயதுவும்,
ஆலில் துயின்றதுவும் ஆர் அறிவார் - ஞாலத்
தொரு பொருளை வானவர் தம் மெய்ப்பொருளை,
அப்பில்
அருபொருளை யான் அறிந்தவாறு.



ஆலிலை க்ருஷ்ணர்
(நன்றி: சௌ ஸ்வேதா)

திருப்பாற்கடலில் பள்ளிக் கொண்டிருப்பதும், ஸ்ரீரங்கத்தில் அனாதி காலமாக மேவி இருப்பதும், ப்ரளய காலத்தில் ஆலிலை மேல் யோக நித்ரை புரிவதும், உலகங்களுக்கு முக்கிய புருஷார்த்தமாய் இருப்பதும், விண்ணோரால் சரி வர அறியப்பட்டதும், ஸ்ருஷ்டியின் தொடக்கத்திலே ப்ரளய ஜலத்தில் மிதந்து கொண்டு, ஜீவ ராசிகளை உண்டு பண்ணும் ஒரு அத்புதமான தத்வத்தை, நான் அறிந்தவாறு, மற்றவர் இவ்வுலகில் அறிய மாட்டார் எனப்

பெருமிதத்துடன் கூறினார்.

வ்யூகத்தில், திருப்பாற்கடலைத் தன் பள்ளி கொள்ளும் இடமாகக் கொண்ட எம் பெருமான், அர்ச்சையில் குடந்தை, திருவெஃகா, திரு எவ்வுள், ஸ்ரீரங்கம், திருப்பேர் நகர், திரு அன்பில் ஆகிய க்ஷேத்ரங்களில் நாக சயனம் கொண்டே ஸேவை தருகிறான். திருப்பாற்கடலில் ஆதிசேஷன் என்ற பெரிய நாகத்தின் மேல் சயனித்திருப்பவன் ஆதி நெடுமாலாய் நின்று, தன்னிடம் சரணாகதி செய்தவர்களை தவறாது ரக்ஷித்து, அவர்கள் உள்ளங்களில் நித்ய வாஸம் செய்கிறான் என்று திருமழிசை சொன்ன பாசுரம் பின் வருமாறு:




ஸ்ரீ வடிவழகிய நம்பி – திருவன்பில் (நன்றி: www.divyadesam.com)

நாகத்தணைக் குடந்தை வெஃகாத் திருவெவ்வுள்,
நாகத்தணையரங்கம் பேரன்பில் - நாகத்
தணைப் பாற்கடல் கிடக்கும் ஆதி நெடுமால்,
அணைப்பார் கருத்தனாவான்.

அவன் தன்னை விச்வாஸத்துடன் அண்டியவர்களை காப்பாற்றி, முக்தியளிப்பதை ச்வேதாச்வரோபநிஷத் பின் வருமாறு விளக்குகிறது:

भावग्राह्यमनीडाख्यं भावाभावकरं शिवम् ।
कलासर्गकरं देवं ये विदुस्ते जहुस्तनुम् ॥

பாவக்ராஹ்யமநீடாக்யம் பாவாபாவகரம் சிவம் |
கலாஸர்ககரம் தேவம் யே விதுஸ்தே ஜஹுஸ்தநும் ||

(Meaning): That Supreme Divinity, who created both life and matter, who is the source of all arts and sciences, who can be intuited by a pure and devoted mind – realizing him, the Blissful, the incorporeal and the nameless one is freed from further embodiment.

திருமங்கை கொண்டாடிய திருப்பாற்கடல் நாதன்

திருமங்கை 11 பாசுரங்கள் மூலம் க்ஷீராப்தி நாதனை கொண்டாடியுள்ளார். முதல் பாசுரம், நைமிசாரண்யத்து எம் பெருமானுடன் சேர்ந்தது. அப்பாசுரப் பகுதி பின் வருமாறு:

பரமனே பாற்கடற் கிடந்தாய்
நாடி நான் வந்துன் திருவடியடைந்தேன்
நைமிசாரணியத்துளெந்தாய்.

மற்ற ஒரு நைமிசாரண்யத்து பாசுரத்தில், க்ஷீராப்தி நாதனை மறுபடியும் பின் வருமாறு மங்களாஸாசனம் செய்தார்:

தேனுடைக் கமலத்திருவினுக்கரசே!
திரைகொள் மாநெடுங்கடல் கிடந்தாய்!
நானுடைத்தவத்தால் திருவடியடைந்தேன்
நைமிசாரணியத்துளெந்தாய்.

திருவேங்கடம் பற்றிய பாசுரம் ஒன்றில், “பள்ளியாவது பாற்கடலரங்கம்” என்று

மங்களாஸாசனம் செய்தார். திருவெள்ளியங்குடி திருப்பதி பாசுரம் ஒன்றில், அத் திருப்பதியை “பறவை முன்னுயர்த்துப் பாற்கடல் துயின்ற பரமனார் பள்ளி கொள் கோயில்” என விளக்கினார். வ்யூஹ மூர்த்தியான திருப்பாற்கடல் நாதன், திருவெள்ளியங்குடியில் சயனித்துள்ளான் என்று ஆழ்வார் கூறினார். அவனை மறுபடியும், பலச்ருதி பாசுரத்தில் “தெண் திரை வருடப் பாற்கடல் துயின்ற திருவெள்ளியங்குடியான்” என வணங்கி திருப்பாற்கடல் நாதனை மங்களாஸாசனம் செய்தார்.

திருவரங்கத்து பாசுரம் ஒன்றில், திருமங்கை “கடல் கிடந்த கருமணியை, மைம்மான மரகதத்தை, மறையுரைத்த திருமாலை, எம்மானை எனக்கென்றுமினியானைப் பனி காத்த வம்மானை யான் கண்டது அணி நீர்த் தென்னரங்கத்தே” என்று மங்களாஸாசனம் செய்தார்.

திருவழுந்தூர் பாசுரம் ஒன்றில், மஹாலக்ஷ்மியும், பூமி தேவியும் பகவானுடைய செம் பொன் திருவடி இணைகளை வருடுவதையும், திருப்பாற்கடலில் அனந்தாழ்வான் என்ற மஹா ஸர்ப்பத்தின் மேல் சயனித்துக் கொண்டு யோக நித்ரை செய்வதையும் பின் வருமாறு திருமங்கை கொண்டாடினார்:

செங்கமலத் திருமகளும் புவியும் செம் பொன்
    திருவடியினிணை வருட முனிவரேத்த,
வங்கமலி தடங்கடலுள் அனந்தன் என்னும்
    வரியரவின் அணைத் துயின்ற மாயோன் காண்மின்.

திருக்கண்ணபுரத்து எம் பெருமான் திருப்பாற்கடல் வெள்ளத்தில், ஆதிசேஷன் என்ற அரவணை மேல் யோக நித்ரை செய்பவனாக பின் வருமாறு ஸேவித்துக் கொண்டார்:

வெள்ளை நீர் வெள்ளத்து அணைந்த அரவணை மேல்,
துள்ளு நீர் மெள்ளத் துயின்ற பெருமானே,
வள்ளலே உன் தமர்க்கென்றும் நமன் தமர்,
கள்ளர் போல் கண்ணபுரத்து உறையும் அம்மானே

திருமாலிருஞ்சோலை சுந்தரராஜனை துதிக்கும் ஒரு பாசுரத்தில், திருமங்கை கல்ப

ஆரம்பத்தில், திருப்பாற்கடலில் அநிருத்தனாய் சயனித்திருந்த "மூவரின் முன் முதல்வனை" பரகால நாயகியின் தாயார் முகமாக பின் வருமாறு ஸேவித்துக் கொண்டார்:

மூவரின் முன் முதல்வன் முழங்கார் கடலுள் கிடந்து,
பூவலருந்தி தன்னுள் புவனம் படைத்து உண்டு உமிழ்ந்த,
தேவர்கள் நாயகனைத் திருமாலிருஞ்சோலை நின்ற,
கோவலர் கோவிந்தனைக் கொடியேரிடை கூடுங்கொலோ.

அலைகள் ஒலி நிறைந்த திருப்பாற்கடலில் சயனித்தும், திருமாலிருஞ்சோலையில் நின்றும், இந்திரனால் கோவிந்த பட்டாபிஷேகம் செய்யப்பட்டவனுமான ஆதி மாலை, கொடிக்கு சமானமான மெல்லிய இடை உடைய என் பெண் கூடக் கூடுமா என என பரகால நாயகியின் தாயார் இப் பாசுரத்தில் கவலையுடன் கேட்டாள்.

திருநெடுந்தாண்டகத்தின் இரு பாசுரங்களில், திருமங்கை க்ஷீராப்தி நாதனை பக்தி ததும்ப நமஸ்கரித்துக் கொண்டார். முதல் பாசுரத்தின் பின் பாதியில்,

பங்கயத்தாய் பாற்கடலாய் பாரின் மேலாய்
பனிவரையின் உச்சியாய் பவள வண்ணா,
எங்குற்றாய் எம் பெருமான் உன்னை நாடி
ஏழையேன் இங்ஙனமே உழி தருகேனே.

ருத்ரனை வலப் புறம் கொண்டவனே! க்ஷீராப்தியில் சயனித்துள்ளவனே! பூமியில் அர்ச்சையாய் பல திருப்பதிகளில் உறைபவனே! குளிர்ந்த இமயமலையின் உச்சியில் (பதரீகாச்ரமத்தில்) இருக்கும் நாராயணனே! பவள நிறம் உடையவனே! பெருமானே! என் கண்ணில் படாது எங்கோ ஒளிந்துள்ளாயே! உன்னைக் கண்டு, கலந்து அனுபவிக்கும் பாக்யம் இல்லாது, துர்பாக்யனான நான் அலைந்து அலற்றி வருகிறேன் என இங்கு ஆழ்வார் சொன்னார்.

மற்ற ஒரு திருநெடுந்தாண்டக பாசுரத்தில், திருமங்கை க்ஷீராப்தி நாதனை, "கடல் கிடந்த கனியே" என்றழைத்து, பரகால நாயகியின் தாயார், என் பேதைப் பெண், உன் திருநாமங்களை பிதற்றிப் பாடி வருகிறாள் என்றார்.

## நம்மாழ்வார் அனுபவித்த க்ஷீராப்தி நாதன்

நம்மாழ்வார் திருப்பாற்கடல் க்ஷேத்ரத்தையும், அங்கு வ்யூஹ நிலையில் உள்ள பெருமானையும், ஒன்பது பாசுரங்கள் மூலம் மங்களாஸாசனம் செய்துள்ளார். நம்மாழ்வாரின் முதல் அருளிச் செயல் திருவிருத்தத்தின் 79வது பாசுரமாக வெளிப்பட்டது. இப் பாசுரம் மிகவும் அழகானது. இது பின் வருமாறு ஸேவித்துக் கொள்ளப் பட்டது:

வேதனை வெண்புரி நூலனை விண்ணோர் பரவ நின்ற
நாதனை ஞாலம் விழுங்கும் அநாதனை ஞாலம் தத்தும்
பாதனைப் பாற்கடல் பாம்பணை மேற் பள்ளிக்கொண்டருளும்
சீதனையே தொழுவார் விண்ணுளாரிலும் சீரியரே.

அவனோ வேத வேத்யன், வேதங்கள் எல்லாம் அறிந்தவன். வெளுத்த யக்ஞோபவீதத்தை அணிந்தவன்; வானவர் ஏத்தும் ஸர்வேச்வரன்; ப்ரளய காலத்தில் உலகங்களை விழுங்கி காப்பவன்; ஸர்வ ஸ்வாமி, தனக்கு உயர்ந்த யஜமானன் இல்லாத தனிப் பெருந்தகை; மூன்று உலகங்களையும் தன் திருவடிகளால் அளந்த த்ரிவிக்ரமன்; அவனே திருப்பாற்கடலில், ஆதிசேஷன் மேல் சயனித்திருக்கும் குளிர்ந்த மனத்தினன்; அவனை தொழுது நிற்பவர்கள் நித்ய சூரிகளை விட அதிகமான சிறப்பு உடையவர்கள் என்று இப் பாசுர மூலம் நம்மாழ்வார் தெரிவித்தார்.

திருப்பாற்கடல் நாதனை மங்களாஸாசனம் செய்த நம்மாழ்வாரின் இரண்டாவது பாசுரத்தை பெரிய திருவந்தாதியில் சந்திக்கிறோம். அப் பாசுர வாக்கியங்கள் பின் வருமாறு:

பாலாழி நீ கிடக்கும் பண்பை யாம் கேட்டேயும்,
காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும் - நீலாழிச்
சோதியாய்! ஆதியாய்! தொல்வினை எம்பால் கடியும்
நீதியாய்! நிற்சார்ந்து நின்று.

கரு நீலக் கடலின் ஒளியை உடையவனே! ஆதி மூர்த்தியே! நாங்கள் சேர்த்துக் கொண்டிருக்கும் பழம் பாவங்களை அழிக்கும் உபாயமே! நீல மணியான நீ, வெள்ளை நிறமுடைய திருப்பாற்கடலில் சயனித்திருப்பதை, சாஸ்த்ரங்கள் சொல்லக் கேட்டு, அந்த

அனுபவ முதிர்ச்சியால், எங்கள் கால்கள் பூமியில் நிலைக்காது தடுமாறுகிறது. எங்கள் ப்ரக்ஞை மறையும்; கண்களும் நிலையில்லாது சுழலும். அந்த அனுபவம் எங்களை திணற அடித்து, திகைக்க வைக்கும் என நம்மாழ்வார் சொல்லி, பாலாழியில், நீலாழிச் சோதியாய் சயனித்திருப்பவனை துதித்தார்.



ஸ்ரீ அநந்தபத்மநாபப் பெருமாள் (ஆத்துப் பெருமாள்) (நன்றி:சௌ.ஸ்வேதா சுந்தரம்)

எம் பெருமானை ஸர்வ ரக்ஷகனாகவும், ஸர்வ வித பந்துவாகவும், அழைக்கும் மற்ற ஒரு பெரிய திருவந்தாதி பாசுரத்தில், திருப்பாற்கடல் நாதனை நம்மாழ்வார் மங்களாஸாசனம் செய்தார். அப் பாசுரம் பின் வருமாறு:

உரைக்கிலோர் சுற்றத்தார் உற்றாரென்றாரே
இரைக்கும் கடல் கிடந்த எந்தாய் - உரைப்பெல்லாம்

நின்னன்றி மற்றிலேன் கண்டாய் எனது உயிர்க்கோர்
சொல் நன்றியாகும் துணை.

அலைகள் மோதி கோஷம் செய்யும் திருப்பாற்கடலில் சயனித்துள்ள அப்பனே! உன்னைத் தவிர நண்பர்கள், பந்துக்கள் என்று சொல்லக் கூடியவர்கள், உண்மையாக சொல்லப் போனால், எனக்கு ஒருவரும் இல்லை. இது விஷயம் புரிந்து கொண்ட நான், உன்னையே உறவினாகவும், நண்பனாகவும் நம்பி வாழ்கிறேன். உன்னிடம் சரணாகதி செய்தும், "மாதா பிதா ப்ராதா நிவாஸ: சரணம் ஸுஹ்ருத் கதி: (ஸர்வம்) நாராயண:" என்ற ஸத் வாக்யத்தை துணையாக நம்பி நிற்கிறேன். திருப்பாற்கடலில் சயனித்துள்ள ஆதி மூர்த்தியே! நீயே எனக்கு வழித் துணை என ஆழ்வார் இங்கு சொன்னார்.

அடுத்த ஆறு க்ஷீராப்தி மங்களாஸாசனப் பாசுரங்களை திருவாய்மொழியின் பல பகுதிகளில் சந்தித்துக் கொள்கிறோம். இவைகளுள் முதலானது இரண்டாம் பத்து, ஐந்தாம் திருமொழியில் காணப்படும். இது பின் வரும் பாசுர வாக்கியங்கள் கொண்டது:

பாம்பணைமேல் பாற்கடலுள் பள்ளியமர்ந்ததுவும்,
காம்பணைதோள் பின்னைக்கா ஏறுடனேழ் செற்றதுவும்,
தேம்பணைய சோலை மராமரமேழ் எய்ததுவும்,
பூம்பிணைய தண்டுழாய்ப் பொன்முடியும் போரேறெ.

இங்கு பாற்கடலில் சயனித்து யோக நித்ரை செய்யும் எம் பெருமான், பல அவதாரங்களில் நிரூபித்த கல்யாண குணானுபவங்களை நம்மாழ்வார் கொண்டாடினார். அந்த அனுபவங்களைத் தான் சொல்லக் கேட்டு, திருப்பாற்கடல் நாதன் மகிழ்ந்ததை இங்கு கூறினார். க்ருஷ்ணாவதாரத்தில், மூங்கிலைப் போல் நீண்டதும், அழகு கொண்டதுமான தோள்களை உடைய நப்பின்னைக்காக ஏழு எருதுகளையும், ஒரே அடியால் அழித்ததை முதலில் அனுபவித்தார். அடுத்த படியாக ராமாவதார சமயம், ஒரே அம்பினால் ஏழு ஆச்சா மரங்களையும் வெட்டித் தள்ளியதையும் ஸேவித்துக் கொண்டார். அழகிய திருத்துழாய் மாலையைத் தன் ஸ்வர்ண க்ரீடத்தின் மேல் அணிந்திருக்கும் எம்பெருமான், தாம் அனுபவிப்பதைக் கண்டு உவந்தான் என்று ஆழ்வார் சொன்னார்.

இரண்டாம் பத்தின், ஆறாவது திருமொழிப் பாசுரம் ஒன்றில், நம்மாழ்வார், க்ஷீராப்தி

நாதா! உன்னை இடை விடாது சிந்தித்து பிழைத்த நான், ஸகல பாவங்களும் அந்த சிந்தனையால் விலகினவனாய் உள்ளேன். உன்னிடம் இம் மாதிரி முடிவிலா அடிமை செய்து நிற்கும் நான், உன்னை இனி விடக் காரணம் உண்டோ என்று பின் வருமாறு கொண்டாடினார்:

உய்ந்து போந்தென் உலப்பிலாத வெந்தீவினைகளை நாசஞ் செய்து, உனது
அந்தமில் அடிமை அடைந்தேன் விடுவேனோ?
ஐந்து பைந்தலையாடரவணை மேவிப் பாற்கடல் யோக நித்திரை,
சிந்தை செய்த எந்தாய், உன்னை சிந்தை செய்து செய்தே.

மூன்றாம் பத்தின், ஏழாம் திருமொழி முதல் பாசுரத்தில், "பாற்கடல் சேர்ந்த பரமனை" நம்மாழ்வார் நமஸ்கரித்துக் கொண்டார். பாகவத சேஷத்வத்தைக் கொண்டாட ஏற்பட்ட இப் பாசுரம் பின் வருமாறு:

பயிலும் சுடரொளி மூர்த்தியை பங்கயக் கண்ணனை,
பயில இனிய நம் பாற்கடற் சேர்ந்த பரமனை,
பயிலும் திருவுடையார் யவரேலும் அவர் கண்டீர்,
பயிலும் பிறப்பிடை தோறெம்மை யாளும் பரமரே.

மேன் மேலும் வளரும் தேஜஸ் உடைய திவ்ய மங்கள விக்ரஹம் கொண்ட பகவான், செந்தாமரைக் கண்களுடன், அனுபவிக்க அனுபவிக்க ஆரா அமுதமாகவும், திருப்பாற்கடலிலே பிராட்டியுடன் சேர்ந்து ஸேவை தருகிறான். தன் ஒப்பாரில்லா க்ஷீராப்தி நாதனை பலன் ஏதும் எதிர்பார்க்காது அனுபவிக்கும் அருள் பெற்ற பாகவதர்கள், எந்த குலத்தில் பிறந்திருந்தாலும், நமக்கு தலைவரான பரமர்களே என்று ஆழ்வார் சொன்னார். எம் பெருமான் குணங்களில் ஈடுபட்டு நிற்கும் பாகவதோத்தமர்கள் சிறந்த சேஷிகளே ஆவர் என்று ஆழ்வார் சொன்னார்.

திருவாய்மொழியின் எட்டாவது பத்து, முதல் திருமொழி பாசுரம் ஒன்றில், நம்மாழ்வார் க்ஷீராப்தி நாதனை பின் வருமாறு போற்றினார்:

மணந்த பேராயா! மாயத்தால் முழுதும்

வல்வினையேனையீர்கின்ற,

குணங்களையுடையாய்! அசுரர் வன்கையர்

கூற்றமே! கொடிய புள்ளுயர்த்தாய்!

பணங்காளாயிரமுடைய பைந்நாகப்-

பள்ளியாய்! பாற்கடல் சேர்ப்பா!

வணங்கும் ஆறறியேன் மனமும் வாசகமும்

செய்கையும் யானும் நீ தானே!

மாயம் செய்து, ஏழு எருதுகளை அழித்து, நப்பின்னை கரம் பிடித்த ஆயனே! உன்னுடைய மாயத்தால், கொடிய பாவமுடைய என்னை பாபஹீனனாக செய்பவனே! அசுரர்களுக்கு யமனாய் இருப்பவனே! உனது எதிரிகளை உனக்கு முன்னே அழிக்கும் கருடனை கொடியாக உடையவனே! ஆயிரம் படங்களுடன் விசாலமாக பரந்து, உனது மெத்தையாக இருக்கும் ஆதிசேஷன் மேல் திருப்பாற்கடலில் சயனித்திருப்பவனே! நானாக உன்னை வணங்குவது என்பதை நான் அறியேன்! ஏனெனில், எனது மனதிற்குள்ளும், வாக்குள்ளும், செய்கையுள்ளும் அந்தர்யாமியாகி நின்று நீயே எல்லாவற்றையும் நடத்திக் கொள்கிறாய் என்று ஆழ்வார் க்ஷீராப்தி நாதனிடம் சொன்னார்.

“நங்கள் வரிவளை” என்று ஆரம்பமாகும் எட்டாம் பத்தின், இரண்டாம் திருமொழி பாசுரம் ஒன்றில், பராங்குச நாயகி, பரமபதத்தையும், திருப்பாற்கடலையும், திருவேங்கட மலையையும் சேர்த்து மங்களாஸாசனம் செய்தாள். இப் பாசுரம் பின் வருமாறு:

இடையில்லை யான் வளர்த்த கிளிகாள்!

பூவைகாள்! குயில்காள்! மயில்காள்!

உடையநம் மாமையும் சங்கும் நெஞ்சும்

ஒன்றும் ஒழியவொட்டாது கொண்டான்,

அடையும் வைகுந்தமும் பாற்கடலும்

அஞ்சனவெற்பும் அவைநணிய,

கடையறப் பாசங்கள் விட்ட பின்னை

அன்றி அவன் அவை காண்கொடானே.

என்னால் பாலூட்டி, பழம் கொடுத்து வளர்க்கப் பட்ட கிளிகளே, நாகணவாய் புட்களே, குயில்களே, மயில்களே! உங்களுக்கும், எனக்கும் இனி தொடர்பு ஏதுமில்லை. திருமால், என்னுடைய சொத்துக்களையும், ஸௌந்தர்யத்தையும், சங்கு வளைகளையும், சித்தத்தையும் ஒன்று விடாது அபஹரித்துக் கொண்டு விட்டான். எல்லோராலும், கடைசியாக அடையப்படும் பரமபதமும், திருப்பாற்கடலும், திருவேங்கடமும் இப்போதே கிட்டுமாறு செய்து விட்டான். என் பாசத்தை உங்களிடமிருந்து மாற்றி, தன்னிடம் ஸ்திரமாக நிலைக்க வைத்து விட்டான் என பராங்குச நாயகி சொன்னாள்.

நம்மாழ்வாரின் திருப்பாற்கடல் சம்பந்தமான கடைசி பாசுரத்தை, திருவாய்மொழியின் பத்தாம் பத்தின் ஏழாவது திருமொழியில் ஸேவித்துக் கொள்கிறோம். அது பின் வருமாறு:

திருமாலிருஞ்சோலைமலையே திருப்பாற்கடலே என்தலையே,
திருமால் வைகுந்தமே தண் திருவேங்கடமே எனதுடலே,
அருமாமாயத் தெனதுயிரே மனமே வாக்கே கருமமே,
ஒருமா நொடியும் பிரியான், என் ஊழி முதல்வனொருவனே.

நம்மாழ்வாரோ புளிய மரத்தடியில் அன்ன பானமின்றி வளர்ந்து நின்றவர். ஆகாரம், தீர்த்தம் சேராது, வளர்ந்த அதிசயத்தின் காரணத்தை ஆழ்வார் இங்கு விளக்கினார். தன் கரணங்களில் எம் பெருமான் கொண்ட ஆசையால், அவைகளுள் புகுந்து, அவைகளுக்கு புஷ்டி அளித்து வளர்த்தான் என்று ஆழ்வார் சொன்னார்.

திருமாலிருஞ்சோலை போன்ற திருப்பதிகளில் வஸிப்பதில், எவ்வளவு திருப்தி க்ஷீராப்தி நாதனுக்கு உள்ளதோ, அவ்வளவில், தனது ஒவ்வோர் அங்கத்திலும் பகவான் அந்தர்யாமியாக நிற்பதை இங்கு ஆழ்வார் குறிப்பிட்டார். ஒவ்வோர் அவயத்தையும், ஒவ்வோர் திவ்ய தேசத்திற்கு சமானமாக நினைக்கிறான் என்றார். என் அவயங்களை பிரியாது, என்னிடம் ஊழி முதல்வனான க்ஷீராப்தி நாதன் உள்ளான் என ஆழ்வார் சொல்லி, தன்னிடம் அவனுக்குள்ள உறவைக் கொண்டடினார்.

பத்து ஆழ்வார்களால் மங்களாஸாசனம் செய்யப்பட்ட க்ஷீராப்தி நாதன், கடல் மகள் நாச்சியார் என்ற திவ்ய தம்பதிகளை ஸேவித்துக் கொண்டு, நாமும் முக்தி

ஸாம்ராஜ்யத்தை அடைவோமாக!



श्री क्षीरसागरे பால்நிறக்கடல் इति प्रसिद्ध क्षेत्रे अमृत पुष्करणी तटे अष्टाङ्ग विमानच्छायायाम् श्रीमते श्री भू नायिका समेत श्री क्षीराब्दिनाथ परब्रह्मणे नमः

SrI kshIrasAgare pAlniRakkaDal iti prasiddha kshetre amrta pushkaraNI taTe ashTAnga vimAnacChAyAyAm SrImate SrI bhU nAyikA sameta SrI kshIrAbdinAtha parabrahmaNe namaH

சுபமஸ்து! மங்களமஸ்து! ஸர்வாபீஷ்ட ஸித்திரஸ்து!